செ.வெ.எண் 32 நாள்:14.10.2020

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட மணக்குடையான் ஊராட்சியில், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் கனிம வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தாமரைப்பூண்டி காலனியில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் சாலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (14.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

செந்துறை ஒன்றியம், மணக்குடையான் ஊராட்சியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினையேற்று, தாமரைப்பூண்டி காலனியில் செல்லும் சாலையில் அமைக்கப்பட்டுள்ள சாலையினை நேரில் பார்வையிட்டு, பணிகள் தரம் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள். மேலும், பொதுமக்கள் இடத்திற்கே சென்று குடிநீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் குறித்து பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, செந்துறை ஊராட்சி, செந்துறை காலனியில் உள்ள சமுதாய கூடம் முன்புறம் பொதுமக்களின் எளிதாக செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டு பாலத்தினை பார்வையிட்டு, அப்பாலத்தின் நீளம் மற்றும் உயரத்தினையும், பாலத்தின் செயல்முறைகள் பற்றியும் அலுவலர்களிடம் கேட்டறிந்து, ஆய்வு செய்தார்கள்.

மேலும், கொரோனா தொற்று பரவலை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி நமது மாவட்டத்தில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் மருத்துவத்துறை அலுவலர்கள் மூலம் கிராமங்கள் தோறும் பொதுமக்கள் முககவசம் அணியவும், சமூக இடைவெளியினை பின்பற்றவும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. அதேபோல் தங்கள் கிராமங்களில் வெளியே செல்லும்போது முககவசம் அணிந்தும், தம்மைதாமே சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா, சிவாஜி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**